புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • மே 02, 2024 • புரட்சி 24 • முழக்கம் 16 • விலை ரூ.3.00

## இடஒதுக்கீட்டின் எதிரி ஆர்எஸ்எஸ், பாஜக அடிபணிந்தது!

# பெரியாரியலுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி

ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், “அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இடஒதுக்கீட்டை ஆர்.எஸ்.எஸ். இயக்கம் ஒருபோதும் எதிர்த்ததில்லை. பாகுபாடுகள் அகற்றப்படாத வரையில், இடஒதுக்கீடு நடைமுறையில் இருக்க வேண்டும். தேவை இருக்கும் வரை இடஒதுக்கீட்டை தொடர வேண்டும்” என்று பேசியிருக்கிறார். இடஒதுக்கீடு ஒழிக்கப்பட வேண்டுமென்று மோகன் பகவத் ஏற்கெனவே பேசிய காணொளி ஒன்று, தற்போது தேர்தல் சமயத்தில் சமூக வலைத்தளங்களில் வைரலானதை அடுத்து இக்கருத்தை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இடஒதுக்கீடே இருக்காது என்ற காங்கிரஸ் கட்சியின் விமர்சனத்துக்கு அசாம் மாநிலம் கவுகாத்தியில் பதிலளித்திருக்கும் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, “எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. பிரிவினரின் இடஒதுக்கீட்டை பாஜக என்றைக்கும் ஆதரிக்கும். அவர்களின் உரிமையை என்றைக்கும் பாதுகாப்போம்” எனக் கூறியுள்ளார். ஆனால் ஆர்.எஸ்.எஸ்., பாஜக இரண்டுமே கடந்த காலங்களில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக உறுதியாகச் செயல்பட்டுள்ளன.

### இடஒதுக்கீட்டுக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ்

2015ஆம் ஆண்டில் ‘தி இந்து’ ஊடகத்திற்கு பேட்டி அளித்த மோகன் பகவத், “சமூகத்தின் சில பிரதிநிதிகள் உட்பட, முழு தேசத்தின் நலனில் உண்மையாக அக்கறையுள்ள மற்றும் சமூக சமத்துவத்திற்காக அர்ப்பணிப்புடன் கூடிய ஒரு குழுவை உருவாக்கி, எந்தப் பிரிவினருக்கு இடஒதுக்கீடு தேவை, எவ்வளவு காலம் தேவை என்பதை அவர்கள் தீர்மானிக்க வேண்டும்” என்று கூறினார். ஆர்.எஸ்.எஸ்.ஸை சேர்ந்த எம்.ஜி.வைத்யா தி இந்து ஊடகத்திற்கு அளித்த பேட்டியில், “இப்போது ஜாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு தேவையில்லை, ஏனென்றால் எந்த ஜாதியும் பின்தங்கியிருக்கவில்லை. அதிகபட்சம், எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு மட்டும் தொடரலாம். அதுவும் 10 ஆண்டுகளுக்கு மட்டுமே. அதன்பிறகு ஜாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும்,” என்றார். அதேபோல ஆர்.எஸ்.எஸ்.ஸைச் சேர்ந்த கோவிந்தாச்சார்யா 2016ஆம் ஆண்டில் ‘தி வயர்’ ஊடகத்திற்கு அளித்த பேட்டியில், அரசியலமைப்பை திருத்த வேண்டும் என்றும், குறிப்பாக இடஒதுக்கீடு நடைமுறையில் திருத்தம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் என்றும் கூறினார். ஆர்.எஸ்.எஸ்.ஸைச் சேர்ந்த மன்மோகன் வித்யா 2017ஆம் ஆண்டில், இடஒதுக்கீட்டிற்கு காலக்கெடு நிர்ணயிக்க வேண்டியது அவசியம் என்று தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

### பாஜகவின் இடஒதுக்கீடு எதிர்ப்பு

அதேபோல பாஜகவும் இடஒதுக்கீட்டின் நோக்கத்தையே சிதைக்கிற பல பணிகளை செய்திருக்கிறது. கல்வி ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஒடுக்கப்பட்டவர்களுக்கே இடஒதுக்கீடு என்ற அரசியலமைப்பின் நோக்கத்தை சிதைத்து, இரண்டே நாட்களில் உயர்ஜாதி ஏழைகளுக்கான பொருளாதார அடிப்படையிலான 10% இடஒதுக்கீட்டை வலிந்து திணித்தது பாஜக அரசு. ஓபிசி பிரிவினருக்கான நியாயமான இடஒதுக்கீட்டை வழங்கிட, ஜாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்த மறுப்பதும் ஒன்றிய பாஜக அரசுதான். நீட் தேர்வில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% உள் இடஒதுக்கீடு வழங்க முந்தைய அதிமுக அரசு முயற்சித்தபோது, கையெழுத்திட மறுத்தவர் ஆளுநர் பன்வாரிலால் புரோகித். இறுதியில் அரசிதழில் வெளியிட்டு சட்டத்தை நடைமுறைப்படுத்தியது அதிமுக அரசு. இதேபோல புதுச்சேரியில் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்க அம்மாநில அரசு முடிவெடுத்தபோது, அதற்கெதிராக வழக்குத் தொடர்ந்தது ஒன்றிய பாஜக அரசு.

மருத்துவ மேற்படிப்புக்கான அகில இந்திய ஒதுக்கீட்டில் ஓபிசி மாணவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படாததை எதிர்த்து, திமுக அரசு தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றத்தின் அழுத்தத்திற்குப் பிறகு நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானது பாஜக அரசு. வி.பி.சிங் ஆட்சிக்காலத்தில் மண்டல் கமிசன் பரிந்துரைகளை ஏற்று, இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27% இடஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டபோது, அதற்கெதிராகவே ரதயாத்திரையை நடத்தினார் அத்வானி. பல இடங்களில் அதனால் கலவரம் வெடித்தது. வி.பி.சிங் ஆட்சிக்கு வழங்கிய ஆதரவை திரும்பப் பெற்று, ஆட்சியைக் கவிழ்க்க வழிவகுத்தது பாஜக. ஆனால் மண்டல் பரிந்துரைகளை பாஜக எதிர்க்கவில்லை என்று இப்போது தொலைக்காட்சி விவாதங்களில் அமர்ந்துகொண்டு கூசாமல் பொய் பேசுகிறார்கள் பாஜகவினர்.

### பெரியாரியலுக்கு கிடைத்த வெற்றி

பாஜக மட்டுமல்ல அப்போது காங்கிரஸ் கட்சியும் கூட ஓபிசி இடஒதுக்கீட்டுக்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. நாடாளுமன்றத்தில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக நீண்ட நேரம் பேசினார் ராஜீவ் காந்தி. ஆனால் இப்போது காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாட்டில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு ராய்பூரில் நடந்த காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில், கட்சிப் பொறுப்புகளில் ஓபிசி பிரிவினருக்கு 50% இடஒதுக்கீடு வழங்க தீர்மானித்தது அக்கட்சி. ஜாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்த வேண்டுமென்று உறுதியோடு பேசுகிறார் ராகுல் காந்தி. மீண்டும் காங்கிரஸ் ஆட்சி அமைந்தால், இடஒதுக்கீட்டுக்கான 50% உச்சவரம்பு நீக்கப்படும் என்று உறுதி கொடுத்திருக்கிறது காங்கிரஸ்.

சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு தொடங்கியிருக்கும் இவ்வேளையில், காங்கிரஸ் கட்சியின் இப்பண்பு மாற்றத்தை எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் கட்சி ஏற்கவில்லை என்ற நோக்கத்திற்காகவே, 1925ஆம் ஆண்டு காங்கிரஸில் இருந்து வெளியேறினார் பெரியார். அதன்பிறகே சுயமரியாதை இயக்கம் கண்டார். சுயமரியாதை இயக்கம் மற்றும் அதன் வழிவந்த திராவிடர் கழகத்தின் இடஒதுக்கீடுக் கொள்கையே தனித்துவமான தமிழ்நாட்டை கட்டியெழுப்பியது. இன்றுவரை தமிழ்நாடு தாங்கிப் பிடித்திருக்கும் சுயமரியாதை உணர்வு, சமூகநீதி கோட்பாடு, மதச்சார்பின்மை ஆகிய அனைத்துமே இடஒதுக்கீட்டில் திராவிட இயக்கம் காட்டிய உறுதியில் இருந்தே பிறந்தவை.

தமிழ்நாட்டின் அந்த உறுதி இப்போது அகில இந்திய அளவில் பரவத் தொடங்கியிருக்கிறது. சுமார் ஒரு நூற்றாண்டு தாமதமாகவேனும், இடஒதுக்கீட்டின் தேவையை மற்ற மாநிலங்களும் புரிந்துகொள்ளத் தொடங்கியிருக்கின்றன. அதனால் இடஒதுக்கீட்டை நிராகரித்துவிட்டோ அல்லது எதிர்த்தோ இனி எவரும் அரசியல் செய்ய இயலாது என்ற சூழலை நோக்கி இந்தியா நகர்ந்துவிட்டது. அதுவே காங்கிரஸ் கட்சியின் பண்பு மாற்றமாகவும், பாஜகவின் தேர்தல் நாடகமாகவும் வெளிப்பட்டிருக்கிறது. இடஒதுக்கீட்டை ஒழிக்க நினைப்பவர்கள் ஒழிந்து போவார்கள் என்ற நிலைமைக்கு காலம் தள்ளியிருப்பதே பெரியாரியலுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய வெற்றி.

## திருப்பூர் சங்கீதா மீது பொய் வழக்கு
## குற்றவாளிகளுக்கு துணைபோகும் காவல் ஆய்வாளர்

நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையின் போது ஜிஎஸ்டி குறித்து பாஜகவினரிடம் கேள்வி எழுப்பிய திருப்பூர் மாநகர கழக அமைப்பாளர் சங்கீதா மீது தாக்குதல் நடத்திய பாஜக நிர்வாகிகள் சின்னச்சாமி, சீனிவாசன், ரவிச்சந்திரன் ஆகியோர் மீது 15 வேலம்பாளையம் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்தனர்.

வழக்குப்பதிவான நிலையில் தலை மறைவான குற்றவாளிகள் முன்பிணைக் கோரி தாக்கல் செய்த மனுவை திருப்பூர் மாவட்ட நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இந்நிலையில் குற்றவாளிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தனர்.

29.04.2024 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது. பாதிக்கப்பட்ட சங்கீதாவுக்கு ஆதரவாக கழக வழக்கறிஞர் திருமூர்த்தி உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் ஆஜரானார்கள். இருப்பினும் குற்றவாளிகளான பாஜக நிர்வாகிகளுக்கு முன்பிணை வழங்கி உத்தரவிட்டது சென்னை உயர்நீதிமன்றம்.

குற்றவாளிகளை கைது செய்யாமல் காலம் தாழ்த்தியதோடு, திருப்பூர் மாநகர அமைப்பாளர் சங்கீதா மீது பொய் வழக்கினை பதிவு செய்த 15 வேலம்பாளையம் காவல் ஆய்வாளருக்கு திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் கடுமையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது. அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து திருப்பூர் மாவட்ட தோழமை இயக்கத்தினருடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும் என்று திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு தெரிவித்தார்.

நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இச்சம்பவத்தை கண்டித்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அதிமுக, இடதுசாரிகள் என அரசியல் கட்சிகள், இணையவாசிகள், பொதுமக்கள் பலரும் தங்களது கண்டனத்தை தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## தலையங்கம்

# ‘குடிஅரசு’க்கு வயது 100

உலக வரலாற்றில் அடக்குமுறைகளுக்கு எதிரான இயக்கங்கள், போராட்டங்கள் ஏராளம் உண்டு. நாட்டை மீட்க, எல்லையை மீட்க அல்லது நாட்டை பிரிக்க என மண் சார்ந்த போராட்டங்களே அவற்றில் பெரிதினும் பெரிதாக உள்ளன. அமெரிக்காவில் கருப்பர்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம், தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்கள் அல்லாதவர்களை அரசியல் மற்றும் பொருளாதார சமத்துவத்தில் இருந்து விலக்கி வைத்த நிறவெறிக்கொள்கைக்கு எதிரான போராட்டம் போன்ற நிறத்தின் அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு எதிரான போராட்டங்களும் உலக வரலாற்றில் உண்டு.

ஆனால் இவை பேசப்பட்ட அளவுக்கு, உலக வரலாற்றில் பேசப்படாத மற்றொரு போராட்டம் உண்டென்றால் அது பெரியார் நடத்திய சுயமரியாதைப் போராட்டமே. பிறப்பின் அடிப்படையிலான இன இழிவை நீக்க பெரியார் ‘சுயமரியாதை இயக்கம் கண்டதன் நூற்றாண்டு இவ்வாண்டு நவம்பரில் தொடங்கவிருக்கிறது. சுயமரியாதை இயக்கம் தொடங்கப்படுவதற்கு முன்பே பெரியார் சுயமரியாதை மீட்புக்கான போராட்டத்தை தொடங்கிவிட்டார். காங்கிரஸ் கட்சியின் 1920 நெல்லை மாநாடு, 1921 தஞ்சை மண்டல மாநாடு, திருப்பூர் மாகாண மாநாடு, 1923-இல் நடந்த சேலம் மாகாண மாநாடு, 1924-இல் திருவண்ணாமலை மாகாண மாநாடு, 1925-இல் காஞ்சி மாகாண மாநாடு என தொடர்ச்சியாக வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி பெரியார் தீர்மானம் கொண்டு வந்தார்.

காங்கிரஸ் கட்சி இத்தீர்மானங்களை ஏற்க மறுத்ததன் விளைவே, 22.11.1925 அன்று நடைபெற்ற காஞ்சி மாநாட்டின் பாதியிலேயே வெளியேறினார் பெரியார். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை பெரியார் தொடர்ச்சியாக வலியுறுத்தக் காரணம் ஏன் என்ற கேள்வியே, சுயமரியாதை இயக்கத்தை ஏன் அவர் தொடங்கினார் என்ற கேள்விக்கும் பதிலாக இருக்கும். எண்ணிக்கையில் நூற்றுக்கு மூவராக இருந்த பார்ப்பனர்கள் அரசு உயர் பதவிகள் அனைத்திலும் நூற்றுக்கு 97 பேராக இருந்தனர். 1912-இல் துணை ஆட்சியர்களில் 55 பேர் பார்ப்பனர்கள். மாவட்ட முன்சீப்களில் 72 பேர் பார்ப்பனர்கள். துணை நீதிபதிகளில் 83 பேர் பார்ப்பனர்கள். ஒற்றை இலக்க எண்ணிக்கையிலேயே மற்ற அனைத்து சமூகத்தினரும் இருந்தனர். கல்வி நிலையங்களில் நிலைமை இன்னும் மோசமாக இருந்தது.

இந்த நிலைமையை மாற்றி எல்லோரும் கல்வி- வேலைவாய்ப்பில் சமத்துவம் பெறவே வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தினார் பெரியார். சமத்துவத்திற்கு தடையாக இருந்த ஜாதி, மதம், புராணம், சாஸ்திரங்கள், இதிகாசங்கள் அனைத்தையும் எதிர்ப்பதையே கொள்கையாகக் கொண்டார். இந்த கொள்கைகளை, லட்சியங்களை நிறைவேற்ற பெரியார் ஏந்திய முதல் ஆயுதம் ‘குடி அரசு’. 1922ஆம் ஆண்டிலேயே இதழ் தொடங்க பெரியார் முடிவெடுத்தபோதிலும், 1925ஆம் ஆண்டு மே 2ஆம் தேதிதான் முதல் இதழ் வெளியானது. திருப்பாதிரிப்புலியூர் திருமடத்தின் தலைவராக இருந்த ’சிவசண்முக மெய்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் முதல் படியை வெளியிட்டு குடிஅரசு ஏட்டை தொடங்கிவைத்தார்.

அன்று தொடங்கி 1949 நவம்பர் வரை குடிஅரசு ஏடு வெளியானது. பெரியாரின் பண்பாட்டுப் புரட்சியே ஒட்டுமொத்த தமிழ்ச்சமூகத்தின் போக்கைப் புரட்டிப்போட்டது என்பதற்கான ஆகச்சிறந்த வாக்குமூலமாக ‘குடிஅரசு’ திகழ்கிறது. ‘‘மக்களுள் தன்மதிப்பும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கிவளரல் வேண்டும். மக்கள் அனைவரும் அன்பின் மயமாதல் வேண்டும்’’ என்று குடிஅரசின் நோக்கத்தை முதல் இதழிலேயே விளக்கியுள்ளார் பெரியார். தொழில்நுட்பம் வளராத அந்த காலகட்டத்திலேயே வாரம் 10,000 இதழ்கள் விற்பனையானது. சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்ட பிறகு குடிஅரசின் வீச்சு பல்லாயிரம் மடங்கு பெருகியது. தமிழ்நாட்டின் அறிவுப் புரட்சிக்கான கலகக்குரலை குடிஅரசு போல அதற்கு முன்பு வேறெந்த இதழும் ஏற்படுத்தியிருக்கவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சியின் சமதர்ம அறிக்கை, புரட்சியாளர் அம்பேத்கரின் லாகூர் ஜாட் பட் தோடக் மண்டலத்தார் மாநாட்டு தலைமையுரையை தமிழில் முதன்முதலில் மொழிபெயர்த்து வெளியிட்டது குடிஅரசு ஏடு. வடமொழிச் சொற்களை தவிர்த்து எழுத்துச் சீர்திருத்தத்தை குடிஅரசில் நடைமுறைப்படுத்தினார் பெரியார். பெரியார் மட்டுமின்றி கைவல்ய சாமியார், சிங்காரவேலர், சாமி சிதம்பரனார், மயிலை சீனி.வெங்கடாசாமி, கோவை அய்யாமுத்து, பாரதிதாசன், ச.குருசாமி, ப.ஜீவானந்தம், ஜனக சங்கர கண்ணப்பர், ஈழத்து சிவானந்த அடிகள், பண்டிதர் முத்துசாமி, ஆர்.நீலாவதி, அன்னபூரணி, அ.இராகவன் என எண்ணிலடங்காத சிந்தனையாளர்களின் கருத்துக்கள், கட்டுரைகளை குடிஅரசு ஏடு தாங்கி வெளியாகியுள்ளது.

பெரியார் ஜாதிப் பட்டத்தை துறந்தபோது குடிஅரசில் பெயருக்குப் பின்னால் இருந்த ஜாதிப் பட்டம் தானாக ஒழிந்தது. பெண்கள் பத்திரிகைகளில் எழுதுவதே அரிதினும் அரிதாக இருந்த அக்காலகட்டத்தில் நாகம்மையாரையும், கண்ணம்மாளையும் குடிஅரசு பதிப்பாளராக நியமித்தவர் பெரியார். தமிழ் இதழியல் வரலாற்றில் பெரும் சிந்தனைப் புரட்சியையும், தமிழ்நாட்டு மக்கள் வாழ்வியலில் பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்திய ஏடுகளில் குடிஅரசுக்கு நிகர் வேறு இல்லை. நூற்றாண்டில் தமிழ்நாடு கண்ட சுயமரியாதைப் புரட்சியின் முதல் சுடராக ஒளிபாய்ச்சிய ‘குடிஅரசு’ இதழை மாபெரும் போராட்டத்திற்குப் பிறகு, மாபெரும் உழைப்புக்குப் பிறகு மக்கள் கரங்களில் தொகுப்பாகத் தவழச் செய்தது ‘பெரியார் திராவிடர் கழகம்’.

1925 முதல் 1938 வரையிலான குடிஅரசு இதழை ‘‘பெரியாரின் எழுத்தும் பேச்சும்’’ என்ற தலைப்பில் பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட பிறகே, இன்றைய இளம் தலைமுறையும் அடிக்கட்டுமானத்தில் இருந்து சுயமரியாதை இயக்கத்தை அறியும் நிலை ஏற்பட்டது. பெரியார் குறித்த ஆய்வாளர்களுக்கும் அருமருந்தாக அமைந்தது. அதற்காக கழகம் எதிர்கொண்ட சட்டப் போராட்டங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. எனினும் கழகத்தின் இடைவிடா முயற்சிகளாலேயே குடிஅரசு இதழை இன்றைக்கு எல்லோரும் படிக்கிற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. பெரியாரின் எழுத்துக்களை மற்றவர்களும் வெளியிட வேண்டிய நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

சுயமரியாதை சிந்தனைகளை பரப்ப வேண்டிய அவசியம் இப்போது முன்பை விட அதிகமாக இருக்கிறது. இக்காலச்சூழலில் பெரியாரின் எழுத்துக்களையும், சிந்தனைகளையும் இன்னும் வீரியமாக மக்களிடத்தில் எடுத்துச்செல்வோம்.

## தோழர் பத்ரியின் 20–ஆம் ஆண்டு நினைவேந்தல்



**சென்னை :** *வாழ்க்கையை கொள்கையாக்குவோம்! கொள்கையை சமூகமாக்குவோம்!! என்ற இலட்சிய வேட்கையோடு களப்பணியாற்றிய செயல்வீரர் பத்ரி நாராயணனின் 20வது நினைவுநாளை ஒட்டி மயிலாப்பூரில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் மரியாதை செலுத்தி உறுதிமொழி ஏற்கப்பட்டது. இதில் திராவிட முன்னேற்றக் கழக சென்னை மேற்கு மாவட்டத் துணைச் செயலாளர் ஆர்.என்.துரை, விசிக மண்டலச் செயலாளர் ரூதர் கார்த்திக், திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிச் செயலாளர் வெங்கடேசன், கழக மாவட்டத் தலைவர் வேழவேந்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

*அதனைத் தொடர்ந்து நினைவேந்தல் கூட்டம் இராயப்பேட்டை வி.எம் தெரு பத்ரி நாராயணன் நினைவுப் படிப்பகம் முன்பு நடைபெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்ற தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், பத்ரி அவர்களின் படத்தை திறந்து வைத்து நினைவேந்தல் உரையாற்றினார்.*

*தொடர்ந்து அவருடன் பயணித்த கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர், விசிக மைய சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் சாரநாத், காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பாளர் ரவிபாரதி ஆகியோர் பத்ரி குறித்த தங்களது நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.*

*நிகழ்வை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி தொகுத்து வழங்கினார்.*

## தேவேந்திரன் - நிஷா இணையேற்பு விழா



**சென்னை :** *மயிலாடுதுறை பெரியார் அரசு மருத்துவமனையில் குழந்தைநல மருத்துவராக பணிபுரியும் அ.வா.தேவேந்திரன் அவர்களுக்கும், நீலகிரி மாவட்டம் குன்னூரை சேர்ந்த, மயிலாடுதுறை அறம் குழந்தைகள் சிகிச்சையக இயக்குநர் இராம.ஜெனிஃபர் (எ) நிஷா அவர்களுக்கும் ஜாதி - மத மறுப்புத் திருமணம் 14.04.2024 அன்று பெரியார் திடலில் நடைபெற்றது.*

*இணையேற்பு விழாவுக்கு தலைமைத் தாங்கிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இணையேற்பை நடத்தி வைத்து வாழ்த்துரையாற்றினார்.*

*இந்நிகழ்வில் இயக்குநர் கோபி நயினார், கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், மாவட்டத் தலைவர் வேழவேந்தன் மற்றும் குடும்பத்தினர் பங்கேற்றனர்.*

## மடத்துக்குளத்தில் பெரியாரியல் பயிலரங்கம்

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளத்தில் இரண்டு நாள் கோடைக்கால பெரியாரியல் பயிலரங்கம் நடைபெறவுள்ளது.

நாள் : மே 21,22 ஆகிய தேதிகளில்
இடம் : சூரியா மகால், பழனி ரோடு, மடத்துக்குளம்

குறிப்பு : இந்த பயிலரங்கில் திருப்பூர், கோவை, பொள்ளாச்சி, ஈரோடு மாவட்டத் தோழர்கள் மட்டுமே பங்கேற்க முடியும். முன்பதிவு கட்டாயம். கட்டணம் ரூ.100/-

முன்பதிவுக்கு : 9942645497, 9842248174, 9442837666, 7373561014, 9842487766

# சுயமரியாதை இயக்கம் ஏன்? எதற்காக? - 1

**பெரியார் தன்னைப் பற்றி சுய விமர்சனத்தோடு எழுதிய கட்டுரை.**

*சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒரு இயக்கம் 1925இல் என்னால் துவக்கப்பட்டது யாவரும் அறிந்ததேயாகும். அதைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டியவர்களுக்கு அதன் கொள்கை என்ன? அது ஏன் துவக்கப்பட்டது? என்கின்ற விஷயம் முதலில் எடுத்துக்கூற வேண்டியது அவசியமல்லவா? அதற்கு முன் என்னைப் பற்றி சில வார்த்தைகள் சொன்னால் தான் என்னைப் பொறுத்தவரை நான் செய்தது சரியா, தப்பா? என்பது விளங்கும்.*

*எனக்கு சிறு வயது முதற்கொண்டு ஜாதியோ மதமோ கிடையாது. அதாவது நான் அனுஷ்டிப்பது கிடையாது. ஆனால் நிர்ப்பந்தமுள்ள இடத்தில் போலியாகக் காட்டிக் கொண்டிருந்திருப்பேன். அது போலவே கடவுளைப் பற்றியும் மனதில் ஒரு நம்பிக்கையோ, பயமோ கொண்டிருந்ததும் இல்லை. நான் செய்ய வேண்டுமென்று கருதிய காரியம் எதையும் கடவுள் கோபிப்பாரே என்றோ தண்டிப்பாரே என்றோ கருதி (எந்தக் காரியத்தையும்) செய்யாமல் விட்டிருக்க மாட்டேன். கடவுள் மகிழ்ச்சி யடைவார் என்று கருதியோ, சன்மானமளிப்பாரென்று கருதியோ (எனக்கு அவசியமென்று தோன்றாத) எந்தக் காரியத்தையும் செய்திருக்கவு மாட்டேன்.*


*எனது வாழ்நாளில் என்றைக்காவது ஜாதி மதத்தையோ, கடவுளையோ உண்மையாக நம்பி இருந்தேனா என்று இன்னும் யோசிக்கிறேன். இதற்கு முன்பும் பல தடவை யோசித்திருக்கிறேன். எப்பொழு திருந்து எனக்கு இவைகளில் நம்பிக்கையில்லை யென்றும் யோசித்து யோசித்துப் பார்த்திருக்கிறேன். கண்டு பிடிக்கமுடியவே இல்லை.*

*எனது ஆறாவது வயதில் நான் ஒரு திண்ணைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பப்பட்டேன். அப்பள்ளிக் கூடம் ஈரோடு டவுனுக்குச் சற்று விலகிய தூரத்தில் இருந்தது. (இப்போது அது நடு ஊராய் விட்டது) அப்பள்ளிக்கூடத்தைச் சுற்றி வாணியச் செட்டிமார் களின் வீடுகள் உண்டு. எண்ணெய்ச் செக்கு சதா ஆடிக்கொண்டு இருக்கும். மூங்கிலில் பாய், முறம், கூடை பின்னுகின்றவர்கள், தெரு ஓரங்களில் குடிசை கட்டிக்கொண்டு தங்கள் வேலை செய்வார்கள். சில முஸ்லீம்கள் வீடும் குடிசை ரூபமாக அங்கே உண்டு.*

*ஆகவே அப்பள்ளிக்கூடத்தைச் சூழ்ந்திருந்த மக்கள் வாணியச் செட்டிமார், வேதக்காரர்கள் (கிறுத்தவர்கள்), சாயபுகள் ஆகியவர்கள். அந்த காலத்தில் இவர்கள் வீட்டில் மற்ற ஜாதியார்கள் என்பவர்கள் எவ்வித உணவும் அருந்த மாட்டார் களல்லவா? ஆகையால் என் வீட்டார்கள், நான் பள்ளிக்குப் போகும்போது எனக்கு ஞாபகமாய் சொல்லியனுப்புவார்கள். என்னவென்றால் "அங்குள்ள ஜாதியார், "பொழங்கக்கூடாத" ஜாதிக் காரர்கள். அவர்கள் வீட்டில் தண்ணீர் குடித்துவிடாதே. வேண்டுமானால் வாத்தியார் வீட்டில் வாங்கிக் குடி"யென்று சொல்லியனுப்புவார்கள். அதுபோலவே இரண்டொரு தடவை வாத்தியார் வீட்டில் தண்ணீர் கேட்டேன். வாத்தியார் ஓதுவார் ஜாதி. மாமிசம் சாப்பிடாத சைவர்கள். அவர்கள் வீட்டுச் சிறு பெண் எனக்குத் தண்ணீர் கொடுக்கும்போது ஒரு வெண்கல டம்ளர் கீழே வைத்து அதில் தண்ணீர் ஊற்றி, எடுத்துத் தூக்கிக் குடிக்கச் சொல்லும். நான் குடித்த பிறகு கவிழ்த்து வைக்கச் சொல்லும்.*

*பிறகு அதன் மீது தண்ணீர் ஊற்றி அதை எடுத்து நிமிர்த்தி உள்ளேயும் தண்ணீர் ஊற்றிக் கழுவி உள்ளே எடுத்துக்கொண்டு போகும். இதற்குள் எனக்குத் தூக்கிக் குடிக்கத் தெரியாமல் குடிக்கும்போது பகுதி தண்ணீர் மூக்கிலும் உடல் மேலும் விழும். பகுதி தண்ணீர் தான் வாயில் விழும். மூக்கில் விழுந்த தண்ணீரால் புரைபோய் இருமல் வந்து வாய்த் தண்ணீர் கீழே விழும். இதையெல்லாம் பார்த்து அந்தப் பெண் அசிங்கப்படும். சில சமயம் கோபித்து வையும். அதனால் நான் தாகம் ஏற்பட்டாலும் வாத்தியார் வீட்டில் தண்ணீர் கேட்பதில்லை. வாணியச் செட்டியார் பிள்ளைகள் வாத்தியார் வீட்டில் தாகத்திற்குத் தண்ணீர் கேட்ப தில்லை. எழுந்து நின்று பெரு விரலை வாத்தியாருக்குக் காட்டியவுடன் "போய்விட்டுச் சீக்கிரம் வா" என்பார். பையன் ஓடோடி அவன் வீட்டிலோ, அவனது வீடு சற்று தூரமாய் இருந்தால் சமீபத்தில் உள்ள ஒரு செட்டியார் வீட்டிலோ குடித்து விட்டு ஓடிவருவான். ஒரு நாள் நானும் அங்கு போய்த் தண்ணீர் சாப்பிடலாமென்று கருதி ஒரு*

**பெரியார்**



*செட்டியார் பையன் எழுந்து பெருவிரல் நீட்டும் போது நானும் நீட்டினேன். இருவரையும் போகும்படி வாத்தியார் தலை யாட்டினார். இருவரும் ஓடினோம், வாத்தியார் "ராமா நீ எங்கே ஓடறை?" என்றார். "தண்ணீருக்கு ஐயா!" என்றேன். "தண்ணீக்கு அவன் கூடப் போறாயே?" என்றார். பிறகு நான் வாத்தியார் வீட்டுக்கு (அதாவது ஒரு கூரைச் சாலையில் ஒரு பாகம் நிரைச்சல் கட்டித் தடுத்து அதில் வாத்தியார் குடியிருக்கிறார்) போய் தண்ணீர் குடித்து தண்ணீரை தேகமெல்லாம் சிந்திக் கொண்டு வேஷ்டியையும் நனைத்துக்கொண்டு வந்து உட்கார்ந்து கொண்டேன்.*

*அடுத்த நாள் தண்ணீர் தாகமெடுத்த போது ஒரு செட்டியார் பையனுடன் கூடப் போகத் தீர்மானம் பண்ணிக் கொண்டு அந்தப் பையனிடம் பேசிவைத்து அவர் தண்ணீர்குடிக்கப் பெருவிரலைக் காட்டு முன்பே நான் ஒன்றுக்குப் போகக் கேட்பவன் போல் எழுந்து நின்று ஆள்காட்டி விரலை நட்டத்தில் நீட்டிக் காட்டினேன். வாத்தியார் தலையை அசைத்தார். நான் வாத்தியார் வீட்டுக்குப் பின்புறம் போய் நின்று கொண்டேன். செட்டியார் வீட்டுப் பையன் தண்ணீர் குடிக்க அனுமதி கேட்டுக்கொண்டு வந்தான். அவன் வீடும் பின்புறமாய் போகக் கூடியதுதான். அவனும் நானுமாக அந்தச் செட்டியார் வீட்டுக்கு ஓடி லோட்டாவில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். நான் சாதாரணமாக எங்கள் வீட்டில் குடிப்பதுபோல் லோட்டா விளிம்பை உதட்டில் வைத்து குடித்தேன். அந்தச் செட்டியார் வீட்டம்மாள் என்னைப் பார்த்ததும் "நீ நாயக்கர் வீட்டுத் தம்பியா?" என்றார். நான் "ஆமாம்" என்றேன். "இங்கே தண்ணீர் குடிக்கிறயே! உங்க வூட்டிலே ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா?" என்றார். "சொல்லமாட்டாங்கோ" என்று சொல்லிவிட்டு ஓடினேன். அந்தப் பையனும் என்கூட ஓடிவந்தான். அதற்குள் அந்தம்மாள் அந்தப் பையனைக் கூப்பிட்டு "டே பழனியப்பா அந்தச் சொம்பைக் கழுவி உள்ளே வைத்துவிட்டுப் போடா" என்றார்.*

*அதேமாதிரி அந்தப் பையன் லோட்டாவைக் கழுவி வைத்துவிட்டு வீதி வழியாக முன்புறம் பள்ளிக் கூடத்திற்கு வந்தான். நான் போன வழியிலேயே பின் புறமாக பள்ளிக்கூடத்திற்கு வந்தேன். பிறகு இப்படியே -இதே மாதிரியாக மற்றொரு சமயம் வேதக்காரன் வீட்டில் தண்ணீர் சாப்பிட்டேன். இது மெல்ல மெல்ல அவர்கள் வீட்டுப் பலகாரங்களும், பிறகு அவர்கள் வீட்டில் விசேஷ காலங்களில் செய்யப்படும் காய்கறி சாமான்களும் கூடச் சாப்பிடும்படியாகச் செய்து விட்டது. எங்கள் வீட்டுக்கு இந்தச் செய்தி எட்டியது. வீடோ நல்ல பணம் வருவாய் ஏற்பட்டு பணம் பெருகி அப்பொழுதுதான் பார்ப்பனர்களைப்போல் நடக்க ஆரம்பித்திருந்த காலம். எந்நேரம் பார்த்தாலும் ஆச்சாரம், அனுஷ்டானம் என்கின்ற வார்த்தைகள் தான் உச்சரிக்கப்படும். என்றாலும் என் தகப்பனாருக்கு இதைப்பற்றி (நான் கண்ட இடத்தில் சாப்பிடுவதைப் பற்றி) அதிகமான கவலை கிடையாது. "சீச்சி இனி அப்படிச் செய்யாதே" என்று சொல்லி விடுவதோடு அவர் வேலை ஒழிந்துவிடும்.*

*என் தாயார் ஏதோ முழுகி விட்டது போல் கருதி மிக துயரப்படுவார். என்ன பண்ணியும் காரியம் மிஞ்சிவிட்டது. சாயபுமார் பையன் கொடுத்த பண்டம் கூடச் சாப்பிட்டு விட்டேன் என்பது என் வீட்டிற்கு தெரிந்து விட்டது. இதற்குள் என் பள்ளிப்படிப்பு எனது பத்தாவது வருஷத்திற் குள்ளாகவே முடிந்து விட்டது. ஏனென்றால் என் சிநேகம் தின்னாத (பொழங்கக்கூடாத) ஜாதியாருடன் தான் அதிகம், அதனாலே நான் முரடனாகிவிட்டேன் என்பது அவர்கள் எண்ணம். காலில் விலங்கு இடப் பட்டேன். அந்த விலங்குகளுடனேயே அந்தப் பிள்ளை களுடன் கூடித் திரிவேன். ஒரு பதினைந்து நாள் இரண்டு கால்களிலும் விலங்குக்கட்டை போடப் பட்டேன். அப்பொழுதும் இரு தோளிலும் இரண்டு விலங்குகளைச் சுமந்துக்கொண்டு திரிந்தேன். அப்போதும் அந்தப் பிள்ளைகளுடன் விளையாடப் போய்விடுவேன்.*

*கடைசியாக நான் அப்பள்ளிக்குப் போவது நிறுத்தப்பட்டு சர்க்கார் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப் பட்டேன். அதாவது முனிசிபல் பிரைமரி பள்ளிக் கூடத்துக்கு அதுவும் 2-ஆவதிலேயே, (10, 12வது வருஷத்திலேயே) நிறுத்தப்பட்டு எங்கள் கடையிலேயே வியாபாரத்தில் போடப்பட்டு விட்டேன். அதில் எனக்குள்ள வேலை, மூட்டைகளுக்கு விலாசம் போடுவது, சரக்குகள் ஏலங்கூறுவது, ஒழிந்த நேரங்களில் என் சொந்த வேலையாம் புராணங்களைப் பற்றி விவகாரம் செய்வது. இந்த வேலை எப்படி ஏற்பட்டதென்றால் எங்கள் வீட்டில் சந்நியாசி களுக்கும், பாகவதர்களுக்கும், சமயப் பிச்சைக்காரர்களுக்கும் (பார்ப்பனர்களுக்கும்) வித்துவான்களுக்கும் ரொம்பவும் செல்வாக்கு இருந்ததினாலும் அவர்களைக் கண்டு எனக்குப் பிடிக்காததாலும், அவர்கள் சொல்வதைப் பரிகாசம் செய்ய ஆரம்பித்து மறுத்துச் சொல்ல ஆரம்பித்து "விதண்டாவாத"க் கேள்விகள் கேட்க ஆரம்பித்து மெல்லமெல்ல அதுவே ஒழிந்த நேரவேலையாகவும் அதுவே இளைப்பாறுவதற்கு ஒரு துணைக் கருவியாகவும் எனக்கு உண்மையிலேயே உற்சாகமுள்ள வேலையாகவும் நேர்ந்துவிட்டது. நான் புராணங்களையோ வேறு எந்தத் தனிப்பட்ட புஸ்தகங்களையோ படித்த தில்லையென்றாலும் சைவம், வைணவம் ஆகிய இரு சமய சம்மந்தமாக உள்ள கதைகளோ, சரித்திரங்களோ சதா சர்வ காலம் – எங்கள் வீட்டில் இரு சமய "பக்தர்"களாலும் பண்டிதர்களாலும், காலட்சேபம் செய்யப்பட்டு வந்தது. ஏன்? பணம் வந்து குவியும்போது தர்மம்*

*செய்து தர்மப் பிரபு பட்டம் வாங்க வேண்டாமா? இவர்களைத்தானே தான பாத்திரங்களாகப் பேசப்படும். ஆதலால் இவர்கள் எங்கள் வீட்டில் குவிந்து கிடப்பார்கள். என் தாயார் இவர்கள் அளப்புகளை அதிக "பக்தி சிரத்தை"யுடன் கேட்டுக் கொண்டேயிருப்பார். தகப்பனாருக்கு இது ஒரு பெருமையாகவும் திருப்தியாகவும் இருக்கும். இதனால் எனக்கு சமய சம்மந்தமான – புராண சம்மந்தமான விஷயங்கள் தானாகவே தெரியவரும். அவற்றிலிருந்தே நான் பல கேள்விகள் கேட்கவும் அவர்கள் (பக்தர்கள், பண்டிதர்கள்) பல கேள்விகளுக்கு பதில் தாறுமாறாகவும் ஆளுக்கு ஒரு விதமாகவும் சொல்லவுமாய் இருந்ததே எனக்கு அதிக உற்சாகத்தை விளைவித்ததோடு என்னை ஒரு "கெட்டிக்காரப் பேச்சுக்காரன்" என்று அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் சொல்லவுமான நிலைமை ஏற்பட்டது. என் தகப்பனார், நான் இப்படி "விதண்டாவாதமான" கேள்வி கேட்பதில் கோபம் வந்தாலும் உள்ளுக்குள் தனது மகன் இப்படி புத்தியாய் பேசுகிறானே என்கிற மகிழ்ச்சி உண்டு.*

*இந்தச் சம்பவங்கள் தான் எனக்கு மேலும் மேலும் ஜாதி மதத்திலும், கடவுள் சாஸ்திரங்கள் ஆகியவைகளிடத்திலும் நம்பிக்கையில்லாமல் போகும்படி செய்திருக்கலாமென்று நினைக்கிறேன்.*

*ஆனால் சுற்றுச்சார்புதான் ஒரு மனிதனின் வாழ்க்கை லட்சியம், கொள்கை ஆகியவைகளுக்குக் காரணமானது என்று சொல்லப்படுகிறது. அனுபவத் தில் பெரிதும் அப்படித்தான் இருந்தும் வருகிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரை ஒரு துறையிலாவது சுற்றுச்சார்பு என்னை அடிமைப்படுத்தியதாகச் சொல்லுவதற்கு இடமே கிடைக்கவில்லை. நான் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு தன்மையிலும் என்னைச் சுற்றி இருந்த சுற்றுச்சார்பு சகவாசம் ஆகியவைகளுக்கு மாறாகவே இருந்து வந்திருக்கிறேன்.*

*எதையும் நான் குறையாய் விட்டு விட்டுப் போகிறேன் என்று அதிருப்திப்படமாட்டேன். நான் ஜீவனோடிருப்பதால் அதற்கு ஒரு வேலை இருந்து தானே ஆகவேண்டும்? எதாவது ஒரு வேலையில்லாமல் உயிர்வாழ முடியாதே என்று கருதி ஏதோ ஒரு வேலை என்பதில் இதை அதாவது ஜாதி, மதமென்ற கொடுமை ஒழிவதும், கடவுள் என்ற மூடநம்பிக்கை ஒழிவதும் மனித சமூகத்திற்கு நன்மையானது என்கின்ற கருத்தில் அதற்காக என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறேனோ அந்த வேலையைச் செய்கிறேன். இந்த உணர்ச்சி வலுத்துத்தான் அதே முக்கியமானதும், முடிவானதுமான வேலையென்று இறங்கி விட்டேன்.*

**தொடரும்**

date of publication - every thursday tamil weekly  Reg.No.tn/cc(S)Dn/459/22-24  licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# “திராவிட புரட்சிக் கவி” பாரதிதாசன்



பெரியார் சிந்தனையை இலக்கியமாக்கியவர் புரட்சிக்கவிஞர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் தேதி புதுவையில் பிறந்தார். தந்தை கனகசபை, தாய் இலக்குமி. 1928 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் மாயவரத்தில் பெரியாரும், டாக்டர் வரதராசலு நாயுடும் பேசுவதாக அறிந்த பாரதிதாசன் ஒரு காங்கிரசுக்காரராக - சைவ பக்திமானாக அக்கூட்டத்திற்குச் சென்று மாற்றம் பெற்று அன்றோடு கடவுள், மதம் ஆகியவற்றைப் பாடுவதை விட்டுவிட முடிவெடுத்துக் கொண்டார்.

எதையும் ஏன், எதற்கு என்று பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து தனக்கு சரியெனப்பட்டதை ஏற்றுக் கொள்க என்று பெரியார் கூறியது கவிஞருக்கு மிகவும் பிடித்தது. அதிலிருந்து பெரியார் கொள்கையை தனது பாடல்களின் கருப்பொருளாக பயன்படுத்தி பாடல்களை எழுதினார்.

1928 இல் கருத்தடைப் பற்றி முதன் முதலாகப் பெரியார் கூறியதை 1936 இல் ‘காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம்’ எனப் பாட்டால் வழி மொழிந்த முதற் கவிஞர் என்ற பாராட்டிற்குரியவர் பாரதிதாசன். மதுரையில் நடைபெற்ற ஒரு தமிழ் மாநாட்டில் புரட்சிக் கவிஞர் கலந்து கொண்டார்.

அப்போது கி.ஆ.பெ. விசுவநாதம், பாவங்களை வைகையிலே சென்று, ‘புண்ணிய’ முழுக்குப் போட புரட்சிக் கவிஞரை அழைத்தார். புரட்சிக் கவிஞரோ நீங்கள் வைகையில் மூழ்கி உங்கள் பாவத்தைக் கழித்துவிட்டு, எனக்குக் குளிப்பதற்குக் கொஞ்சம் நீர் கொண்டு வாருங்கள். நான் அதை சுட வைத்து, அதில் உள்ள பாவங்களை போக்கிவிட்டு பிறகு குளிக்கிறேன் என்றார்.

பண்டைய நாட்களில் போர்க் காலங்களில் வெற்றிக்குச் சின்னமாக முழங்கிய சங்கொலியை இடைக்காலங்களில், பிற்காலங்களில் கோயில்களிலும், கோயில் விழாக்களிலும், பண்டாரங்களின் கைகளில் கொடுத்து விட்டனர். அந்தச் சங்கைப் பண்டாரங்களின் கைகளினின்றும் பிடுங்கித் தமிழின மக்களின் உரிமை மீட்கும் போரில் ஈடுபட்டுள்ள கட்டிளங் காளையரின் கைகளில் கொடுத்தவர் புரட்சிக் கவிஞராவார். ‘எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு’ என்று கவிதையில் சங்கை முழங்க வைத்த முதற் கவிஞர் பாரதிதாசனேயாவார்.

புரட்சிக் கவிஞர் தம் கவிதை முழுவதிலும் தமிழுக்கு மொத்தம் 86 விதமான அடைமொழிகள் தந்து எழுதியது மட்டுமல்லாமல் பிறரால் வடமொழிச் சொற்கள் என்று சொல்லப்பட்ட 235 சொற்களைத் தமிழ்ச் சொற்களே என்று ஆதாரத்துடன் கூறியவர் புரட்சிக் கவிஞர்.

பாரதிதாசன் 1945 முதல் எழுதியுள்ள படைப்புகளில் தூய தமிழ்ப் பெயர்களையே கையாண்டிருப்பதோடு, தன்னுடைய கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் கோவலன் கண்ணகி மணவிழாக் கண்டவர்களின் பட்டியல் தருகின்ற முறையில் 84 தனித் தமிழ்ப் பெயர்களைக் கூறியவர்.

அசுரர்கள் என்று தமிழ் இன மக்களைத் தாழ்த்திப் பேசும் புராண கதைக்கு எதிராக, ‘இரணியன் அல்லது இணையற்ற வீரன்’ என்ற நூலை எழுதினார். ‘வஞ்ச விழா’ எனும் பெயரில் தீபாவளி குறித்துச் சிறு நாடகம் ஒன்றும் எழுதியுள்ளார். அவரும் 1928 முதல் தீபாவளி கொண்டாடுவதை நிறுத்திவிட்டார். புரட்சிக் கவிஞர் பெரியாரை ‘உயர் எண்ணங்கள் மலரும் சோலை’ என்று பாராட்டி கவிதை எழுதியவர். புரட்சிக் கவிஞரைப் பற்றி பெரியார், “பாரதிதாசன், புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்திய முதல் கவியும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவர் புதுமைக் கருத்துக்களையும், மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டுள்ளார். சமுதாய மாற்றத்திற் கான கருத்துக்களைத் துணிந்து கூறிய பெரும் புலவர் ஆவார். இன்றைக்குப் பகுத்தறிவாளர்க்கு எடுத்துச் சொல்லத்தக்க சாதனமாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் அமைந்துள்ளன.”

“காட்டுமிராண்டிகளாக, மிருகங்களாக இருந்த மக்களை மனிதத் தன்மைக்குக் கொண்டு வரப் பாடுபட்டவர் பாரதிதாசன் ஆவார்”. (விடுதலை 21.10.1970)

“நாட்டில் எத்தனையோ கவிஞர் இருந்திருக்கிறார்கள்” என்றாலும், பாரதிதாசனைப் போல் மக்கட்குப் பயன்படும் கவிதைகளை யாரும் இயற்றவில்லை (‘விடுதலை’ 12.12.73) என்று கூறியிருக்கிறார்.

1938 ஆம் ஆண்டு ‘பாரதிதாசன் கவிதைகள்’ முதல் தொகுதியைக் குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி வெளியிட்டனர். புரட்சிக் கவிஞர் 1964 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 இல் இயற்கை எய்தினார். 1928 ஆம் ஆண்டு முதல் 1964 வரை தான் வாழ்ந்த நாட்களில் பெரியாரைத் தவிர வேறு ஒரு தலைவரை ஏற்றுக்கொள்ளாத வாழ்க்கை வாழ்ந்தவர் புரட்சிக் கவிஞர். அவர் வாழ்ந்த காலம் 72 ஆண்டு 11 மாதம் 28 நாள்கள்.

புதுச்சேரி சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் 10.05.1964 இல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மயிலை த. லோகநாதன் ஆகியோருக்கு இரங்கற் கூட்டம் நடைபெற்றது. அதில் குத்தூசி குருசாமி, “ஆதி காலந் தொட்டே ஆத்திகத்திற்கு நாத்திகம் பின்வாங்கியதில்லை. காரல் மார்க்ஸ், இங்கர்சால், சித்தர்கள், புத்தர் போன்றவர்கள் சிறந்த சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்பிச் சென்றார்கள். அந்த அடிச்சுவட்டில் நிலையான இடம் பெற்றவர் பாரதிதாசன் என்று குறிப்பிட்டுள்ளார்.”

புரட்சிக் கவிஞரின் மணி விழா மலராகத் ‘திராவிட நாடு’ 29.4.1951 இதழ் வந்துள்ளது. 1970 ஆம் ஆண்டு கவிஞரின் ‘பிசிராந்தையார்’ நாடக நூலுக்கு சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது. 1971 ஏப்ரல் 29 புரட்சிக் கவிஞரின் பிறந்த நாள் விழா புதுவை அரசு விழாவாகக் கொண்டாடப் பெற்றது. ஒவ்வோராண்டும் அரசு விழா நிகழ்கிறது.

புரட்சிக் கவிஞர் வாழ்ந்த பெருமாள் கோவில் தெரு 95 ஆம் எண் இல்லம் அரசுடைமையாயிற்று - அங்கே புரட்சிக் கவிஞர் நினைவு நூலகம் - காட்சிக் கூடம் நடந்து வருகிறது. 1972 ஏப்ரல் 29 புரட்சிக் கவிஞரின் முழு உருவச் சிலை புதுவை அரசினரால் திறந்து வைக்கப்பட்டது. புரட்சிக் கவிஞரின் ‘அழகின் சிரிப்பு’ என்ற நூலை கதலீஸ் லியோன்ஸ் என்பவர் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்துள்ளார் - பெரியாரின் கருத்துகளை கவிதைகளாக இலக்கியமாக்கியவர் புரட்சிக் கவிஞர்.

# நஞ்சு விதைக்கும் மாதவி!




மக்களவைத் தேர்தலில் பாஜக சார்பில் ஐதராபாத் தொகுதியில் போட்டியிடுபவர் மாதவி. இவர், தேர்தல் பிரசாரத்தின் போது மசூதியை நோக்கி அம்பு விடுவது போல செய்கை செய்து வெறுப்பு அரசியலை தூண்டியதுடன், அது சர்ச்சையானதும் ‘‘நான் மசூதியை பார்த்து அம்பு விடவில்லை’ என்று பின்வாங்கினார்.

இவரை சமீபத்தில் ஊடகர் பர்கா தத், ஒரு பேட்டி எடுத்தார். அந்த பேட்டியில் இடஒதுக்கீடுக்கு எதிரான வன்மத்தையும், இட ஒதுக்கீட்டில் பாஜக அரசியல் நிலையையும் தெளிவுபடுத்துகிறார் மாதவி.

அரசியலுக்கு எப்படி வந்தீர்கள் என்கிற கேள்விக்கு, “தான் ஏழ்மையான சூழலில் வளர்ந்தேன். ஆனால், எஸ்.சி, எஸ்.டி இல்லை. கல்லூரியில் எனக்கு எந்த உதவித்தொகையும் கிடைக்கவில்லை. நான் படித்துக்கொண்டே பல்வேறு வேலைகளை செய்து என்னுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொண்டேன். அதேநேரத்தில், பொருளாதாரத்தில் வசதியான தாழ்த்தப்பட்ட மாணவனுக்கு கல்வி உதவித்தொகை கிடைத்தது. அதை அறிந்த நேரத்தில்தான் நான் அரசியலுக்கு வர வேண்டும் என்ற எண்ணம் வலுவாக தோன்றியது” என்று கூறுகிறார் மாதவி.

வசதி குறைந்த தாழ்தப்பட்ட சமூகத்தைச் சேராத இவருக்கு உதவித்தொகை கிடைக்கவில்லை. ஆனால், வசதியான தாழ்த்தப்பட்ட மாணவனுக்கு உதவி கிடைத்துவிட்டது. இப்படியான அரசியல் புரிதலில் இருந்து மாதவி பாஜகவின் குரலாக ஒலிக்கிறார். இதுதான் அந்தக்கட்சியின் செயல்திட்டமும். அதாவது பொருளாதார ரீதியாக இட ஒதுக்கீடு என்கிற கருத்தை முன்வைக்கிறார் மாதவி.

பொருளாதார ரீதியில் என்று சொல்லிவிட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கான வருமான வரம்பை வருடத்திற்கு மூன்று லட்சம் என்றும், அதாவது மூன்று லட்சத்திற்கு மேல் ஆண்டு வருமானம் வந்தால் இவர்கள் பணக்காரர்கள். ஆனால் அரிய வகை எழையினருக்கு வருடத்திற்கு எட்டு லட்சம் வருமான வரம்பு வைப்பார்கள்.

சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட வரலாறும், வறுமையில் உழலும் பெரும்பான்மை இடைநிலை சாதிகளைப் பற்றிய எந்தவொரு கவலையும், புரிதலும் இல்லாமல் இடஒதுக்கீடு குறித்து நஞ்சு விதைக்கும் மாதவிகளும், அவர்களின் அரசியலும் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

- முரசொலி

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted May 03, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran